பக்கங்கள் 14+3

# மாலை முரசு



முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 08 வியாழக்கிழமை 20.02.2025 | அதிர்வு 204

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



CLICK HERE VIDEO

## கிளிநொச்சியில் தீச்சட்டி ஏந்தி பெரும் போராட்டம்

# இனியும் எம்மை ஏமாற்றாமல் நீதியைப் பெற்றுத் தாருங்கள்

## சர்வதேசத்திடம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச நீதி கோரி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் இன்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் கடந்த 2017 ஆம் ஆண்டு இதே நாளில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இன்று எட்டாவது வருடத்தை நிறைவு செய்த நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் தீச்சட்டி ஏந்திய பேரணி நடைபெற்றது.

02▶



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இனியும் எம்மை...**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தீச்சட்டி ஏந்திய பேரணி டிப்போ சந்தி வரை சென்றது. இதில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டம் தொடர்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை எம்மிடம் ஒப்படையுங்கள் எனக் கோரியும் அல்லது அவர்கள் எங்கே என சிங்கள பேரினவாத அரசிடம் பல முறை கேட்டும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை. எனவே, நாம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி 2017 பெப்ரவரி 20 ஆம் திகதி கிளிநெச்சி கந்தசுவாமி ஆலய முன்பாக ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டமானது வடக்கு, கிழக்கு என விரிவுபடுத்தப்பட்டது.

2017 பெப்பரவரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் எட்டு வருடங்களாக அதாவது இன்றுடன் 2920 நாட்களாக கடந்து தொடர்கின்றது. 2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் போர் மௌனிக்கப்பட்டு 16 ஆண்டுகள் ஆகின்றன.

இன்றும் இனப்படுகொலை தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஆனால், இலங்கையில் ஜனாதிபதிகளும் ஆட்சியாளர்களும் மாறினாலும் தொடர்ந்தும் இனப்படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, நேரடியாக படையினர்களிடம் சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான நீதி இதுவரை கிடைக்கவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினராகிய நாம் 2017 தொடக்கம் இன்று வரையும் உள்நாட்டில் பல போராட்டங்களை நடத்தினோம். இலங்கை அரசின் நீதித்துறையில் நம்பிக்கையில்லை என்ற ஒரு காரணத்தினால் நாம் சர்வதேச நீதி விசாரணை வேண்டும் எனப் பல தடவைகள் கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றோம்.

சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு மகஜர்களையும் அனுப்பினோம். நேரடியாக ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் நேரடியாகச் சென்று ஆவணங்களை ஆதாரத்துடன் கையளித்தோம். ஆனால், இதுவரை எமக்கான நீதி கிடைக்கவில்லை.

2015 ஆட்சியில் இருந்த நல்லாட்சிக் காலம் எனச் சொல்லப்படும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2019 ல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, 2022 இல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையான சகல அரசுகளும் எம்மை ஏமாற்றியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தி மூலம் தற்போதைய புதிய ஜனாதிபதியாக கடந்த 2024 செப்டெம்பர் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்க 2024 நவம்பர் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் எந்தவொரு நல்லெண்ணமும் அவர்களின் செயலில் தென்படவில்லை. மாறாக புலனாய்வாளர்களை ஏவி விட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் தாய்மாரைக் கண்காணிப்பதுடன் அவர்களைச் சுதந்திரமாக தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கேட்டு நடத்தும் கவனயீர்ப்புப் போராட்டங்களில் கலந்துகொள்ள விடாமல் நீதிமன்ற தடை உத்தரவுகளைக் கொடுத்து ஜனநாயக வழிப் போராட்டத்தை அடக்கி ஒடுக்கி தடுக்கும் அடாவடிச் செயல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை. ஜனாதிபதிகளின் பெயர்கள் மாறியுள்ளன செயல்கள் மாறவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுடைய பெற்றோர்கள் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட தமது உறவுகளின் உண்மை நிலையறியாது வேதனையுடன் உயிர் இழந்த பரிதாபங்கள் வடக்கு, கிழக்கில் நடந்துள்ளன. எங்கள் வேதனைகளையும் வலிகளையும் உண்மைகளையும் இலங்கை அரசு புரியவில்லை. அதேபோல் சர்வதேசமும் புரியவில்லை என்பதையே கடந்த எட்டு வருங்களாக நாங்கள் கண்ட உண்மை.

அரசுகள் மாறும் போது எல்லா சர்வதேச இராஜதந்திரிகளும் நாடுகளின் தலைவர்களும் ஏன் ஐக்கிய நாடுகள் சபைகளும் கூட இலங்கை அரசைக் காப்பாற்றும் ஒரு செயலாக கால அவகாசங்களை வழங்கி கால நீடிப்பைச் செய்து வருவதை நாம் எட்டு வருடங்களாக அவதானித்து வந்துள்ளோம் என்ற உண்மையைக் கவலையுடனும் கண்ணீருடனும் மனவேதனையுடனும் இந்த எட்டு ஆண்டு நிறைவில் பதிவு செய்கின்றோம். எனவே, இந்த உண்மைகளை உணர்ந்து இனியும் எம்மை ஏமாற்றாமல் எங்கள் உணர்வுகளை மதித்து சர்வதேச நீதி கிடைக்க ஆவன செய்யுமாறு சர்வதேசத்திடம் வேண்டுகின்றோம்." - என்றுள்ளது.



















# சஞ்சீவவின் சடலத்தைப் பெறுவதற்கு இதுவரை எவரும் முன்வரவில்லை

நீதிமன்ற வளாகத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட பாதாள உலகத் தலைவர் கனேமுல்ல சஞ்சீவ இறந்து ஒரு நாளாகியும் அவரது சடலத்தைப் பெற்றுக்கொள்ள இதுவரை யாரும் முன்வரவில்லை என்று வாழைத்தோட்டம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மினுவங்கொடையைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவவின் சகோதரி முன்வந்த போதிலும், அவரது குடும்பப் பெயரில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சடலம் அவரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கனேமுல்ல சஞ்சீவவின் மனைவி இருந்தும் அவர் சடலத்தைப் பெற்றுக்கொள்ள இன்னும் முன்வரவில்லை என்றும், சடலம் தற்போது பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கிதாரிக்கு உதவிய பெண்ணை கண்டுபிடிக்க ஒத்துழைத்தால் சன்மானம்

## பதில் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு





கொழும்பு, புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் துப்பாக்கிச்சூடு நடத்திய பிரதான சந்தேகநபருக்கு உதவிய பெண் சந்தேகநபரை அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

கடுவெல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்த பிங்புர தேவகே இசார செவ்வந்தி என்ற 25 வயதுடைய பெண்ணைக் கண்டுபிடித்துத் தருமாறு கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் பொதுமக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

அதன்படி, தலைமறைவான பெண்ணை அடையாளம் கண்டால் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் - 0718591727 அல்லது கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி 0718591735 என்ற தொலைபேசி இலக்கங்களில் தகவல்களைத் தெரிவிக்கலாம்.

மேற்படி பெண் பற்றி தகவல்களை வழங்குபவர்களுக்குப் பொலிஸ் நன்கொடை நிதியத்தின் மூலம் சன்மானம் வழங்கப்படும் என்று பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# முகமாலையில் நேற்று நள்ளிரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல்

## கடை ஒன்று சேதம்

முகமாலை வடக்கு, ஏ - 9 வீதியோரமாக அமைந்துள்ள கடை ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்று புதன்கிழமை நள்ளிரவு பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்தக் கடையின் மீது 2020 ஆம் ஆண்டில் கழிவு எண்ணை வீசப்பட்டதுடன் 2021ஆம் ஆண்டில் முகமூடி அணிந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு நபர்களால் இரும்புக் கம்பிக் கொண்டு கடையின் சொத்துக்கள் அடித்து உடைக்கப்பட்டதுடன் சந்தேக நபர்களும் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், நேற்று இரவு மூன்றாவது தடவையாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மீண்டும் நாடாளுமன்றம் வருகின்றார் ரணில்?

## அவருடன் கைகோர்க்க எதிரணி எம்.பிக்கள் பலர் திட்டம்

புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று நம்பகமான அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர், ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் இராஜிநாமா செய்வார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் விக்கிரமசிங்கவுடன் கைகோர்க்கத் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு கட்சிகள் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்துக்கு வருமாறு முன்மொழிந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் காலிப் பகுதிக்கு விஜயம் செய்தபோது, மக்கள் அவரை நாடாளுமன்றத்துக்கு வந்து பொதுச் சேவையில் சேருமாறு கேட்டுக்கொண்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில், ரணில், "கொஞ்சம் பொறுமையாக இருங்கள்" என்று கூறியிருந்தார்.

# 'தினக்குரல்' ஸ்தாபகர் சாமியின் இறுதிக்கிரியைகள் ஞாயிறன்று



மறைந்த பிரபல தொழிலதிபரும் 'தினக்குரல்' பத்திரிகையின் ஸ்தாபகருமான எஸ்.பி. சாமி என அழைக்கப்படும் செல்லையா பொன்னுச்சாமியின் (வயது 89) இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

அன்னாரின் புகழுடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் – செட்டித்தெருவில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையில் அஞ்சலி உரைகள் நிகழ்வுகள் இடம்பெற்று, தகனக் கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்துக்குப் புகழுடல் எடுத்துச் செல்லப்படும் என்று குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.






# ரயில் மோதி 6 யானைகள் பலி!

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மீனகயா ரயில் காட்டு யானைகளுடன் மோதி இடம்பெற்ற விபத்தில் 6 யானைகள் உயிரிழந்துள்ளன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்லோயா ரயில் நிலையத்துக்கு அருகே இன்று வியாழக்கிழமை காலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது மேலும் இரண்டு யானைகள் காயமடைந்துள்ளன.

விபத்து காரணமாக அந்தப் பிரதேசத்தில் ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ரயில்வே திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்து சமுத்திரத்தில் இலங்கை

உலக வர்த்தகம் மற்றும் புதிய தரைகள் கண்டுபிடிப்புகளில் இலங்கைத் தீவு அமைந்துள்ள இந்தியப் பெருங்கடலின் வரலாற்று முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பில் முக்கியமான ஒரு விடயத்தையும் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்னர் ஓமானின் மஸ்கட்டில் நடந்த இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் அவர் இந்தக் கருத்துக்களை முன் வைத்திருக்கிறார். அவை நோக்கற்பாலவை.

''ஐரோப்பியர்கள் வர்த்தக ரீதியாகத் தாம் எடுத்த நகர்வு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக இந்தியா மற்றும் அதை ஒட்டிய இந்தக் கடற்பிராந்தியத் தீவுகள் மீதான கட்டுப்பாட்டை நாடினர். அதனால் அதிகாரத்திலும், செல்வத்திலும், பிற விடயங்களிலும் அவர்கள் உயர்ந்தனர்.

''அவர்களினல் சிலர் அட்லாண்டிக் வழியாக செல்ல வேண்டி இருந்தது. அதனால் இறுதியில் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்கள். ஆக இன்று அமெரிக்காவின் உயர்வுக்கு அடிப்படைப் பின்னணிக் காரணமாக இருந்தது ஆசியாதான். எனவே இப்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பின்பற்றும் கொள்கைப்படி கூறுவதானால் இரண்டு அமெரிக்க கண்டங்களும் தாம் இத்தனை தூரம் உயர்ந்தமைக்கு நன்றிக் கடனாக ஆண்டுதோறும் ஆசியாவுக்கு கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.'' - என்று ரணில் விக்கிரமசிங்க அந்த மாநாட்டில் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

''நாங்கள்- ஆசியப் பிரதேசத்தவர்கள் - இல்லை என்றால் அமெரிக்கக் கண்டமே அப்போது கண்டுபிடிக்கப் பட்டிருக்கவே மாட்டாது. அதனால் அவை இன்றைய இந்த நிலைக்கு உயர்ந்திருக்கவே முடியாது.''- என்ற சாரப்பட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துரை அமைந்திருந்தது.

ஆரம்ப காலம் முதலே சிறப்புமிக்க கேந்திர நிலையமாக விளங்கும் இந்து சமுத்திரம் வளர்ந்துவரும் உலக பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.


இந்து சமுத்திரம் என்பது வெறும் வர்த்தகத் தடம் அல்ல. அது ஓர் உயர்ந்த மனித நாகரிகத்தின் தோற்றுவாய்த் தளமும் கூட. உலக நாகரிகங்கள் பலவும் இங்கிருந்தே தோற்றம் பெற்றன.

இந்து சமயம், புத்த சமயம், சீக்கிய சமயம், சமண சமயம் ஆகியன இந்த நாகரிகத்திலேயே உருப் பெற்றன.

இத்தகைய இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நடு மையமாக இலங்கை மூலோபாய அமைவிடத்தைக் கொண்டுள்ளது. ஆனால் இந்தப் பூகோள வாய்ப்பை இலங்கை தனது அபிவிருத்தி, உயர்வு, நலன், வருமானம் ஆகியவற்றுக்காக முறையாகப் பயன்படுத்திக் கொண்டதா என்ற கேள்வி எழுகின்றது.

உலகின் பணி மிகுதியான, நெருக்கடியான வணிக தாழ்வாரங்களில் ஒன்றாக இந்து சமுத்திரம் வளர்ச்சியடைந்துள்ளது. உலகின் மூன்றில் இரண்டு பங்கு எண்ணெய் கப்பல் சரக்குகளையும், ஒரு பங்கு மொத்த சரக்குகளையும் ஏற்றிச்செல்வதன் வாயிலாக, மிகவும் நெருக்கடியான கடல் வழிக்கான தொடர்பாடலுக்கு அனுசரணையளித்து, உலகின் வணிகம் மற்றும் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் நேரடியாக அது கனகாத்திரமாக தாக்கம் செலுத்துகின்றது.

அதன் மூலோபாய மையத்தில் இருக்கும் இலங்கை அந்த வாய்ப்பை செழுமையாகப் பயன்படுத்தித் தன்னை உயர்த்திக் கொள்ள உரிய முறையில் முயற்சிக்கவேயில்லை என்பதுதான் இதில் பொதிந்துள்ள துன்பியல் உண்மையாகும்.

# சட்டவிரோத தொழிலில் ஈடுபட்ட ஆறு பேர் வட்டுவாகல் நந்திக்கடலில் கைதாகினர்!

(பா.சதீசன் )

வட்டுவாகல் நந்திக்கடல் களப்பில் சட்டவிரோதமாக அனுமதியற்ற முறையில் தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு சிறுவர்கள் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வட்டுவாகல் நந்திக் கடல் களப்பில் சட்டவிரோதமாக அனுமதியற்ற சட்ட விரோத படகு, வலைகள், கூட்டு வலைகளை பயன்படுத்தி தொடர்ச்சியான முறையில் ஈடுபட்டதை தொடர்ந்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரு சிறுவர்கள் உட்பட ஆறு நபர்களை கைது செய்யப்பட்ட நிலையில், சிறுவர்கள் என்பதால் இருர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனைய நால்வரையும் நீதிமன்றில் முற்படுத்தி 14 நாள்கள் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்வள திணைக்களத்தின் ஒத்துழைப்புடன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கமும், வட்டுவாகல் கடற்தொழில் கூட்டுறவு சங்கத்தினரும், செல்வபுரம் கடற்தொழில் கூட்டுறவு சங்கத்தினரும் இலங்கை கடற்படையினரும் இணைந்து சட்டவிரோத தொழிலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



# மன்னார் கடல் பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர் கைது!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் கடல் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இன்று வியாழக்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் தமிழ்நாடு மாநிலம் ராமேஸ்வரம் காந்திநகர் பகுதியை சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர் .

மன்னார் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் வடமத்திய மாகாண கடற் படையினரின் கூட்டு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் .

கைது செய்யப்பட்ட குறித்த 4 இந்திய மீனவர்களும் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மன்னார் மாவட்டத்தில் குவிந்துள்ள உள்நாட்டு, வெளிநாட்டுப் பறவைகள்

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்துக்கு ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளை சேர்ந்த புலம் பெயர் பறவைகள் வருகை தருவது வழமை.

மன்னார் மாவட்டமானது புலம்பெயர் பறவைகளின் பயணப் பாதையில் அமைந்துள்ளமையால் பல நாடுகளை சேர்ந்த பறவை இனங்கள் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு வருகை தருவதோடு சில பறவை இனங்கள் இனப்பெருக்க செயற்பாடுகளை மேற் கொண்ட பின்னர் தங்கள் நாடுகளுக்கு செல்கின்றன.

இவ்வாறான நிலையில் இம் மாதம் ஆரம்பத்தில் இருந்து வெளிநாட்டு பறவைகளின் வரவு மன்னார் மாவட் டத்தில் காணப்படுகிறது. குறிப்பாக சதுப்பு நிலங்களை அண்டிய பகுதிக ளில் உள்ளூர் பறவைகளுடன் இணைந்து உணவு உண்ணும் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஆனால் மன்னார் மாவட்டத்தில் முன்னைய ஆண்டுகளில் அதிகளவான பறவைகள் வருகை தந்த நிலையில் இந்த முறை பறவைகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் காற்றாலை செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்ன ரான காலப்பகுதியில் இவ்வாறான பற வைகளின் வருகை குறைவடைந்துள் ளது என்று உள்ளூர் மக்கள் தெரிவிக் கின்றனர். சுற்றுலா பயணிகள் தற்போது குறித்த பறவைகளைப் பார்வையிட மன்னார் பகுதிக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர்.








# உசன் இராமநாதன் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் நிகழ்வுகள்

(த.சுபேசன்)

மிருசுவில், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை பிற்பகல் பாடசாலை அதிபர் க.உமாபாலன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றிருந்தன.

விளையாட்டு நிகழ்வுகள் உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குருக்களான கேதீஸ்வரக் குருக்கள் மற்றும் மிருசுவில் பங்குத்தந்தை அருட்பணி ஜெயரஞ்சன் அடிகளார் ஆகியோரின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகியிருந்தன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் ஐக்கிய இராச்சிய வைத்தியருமான வைத்தியக் கலாநிதி வேலுப்பிள்ளை பரமநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.நவநீதன், கொடிகாமம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோரும், கௌரவ விருந்தினராக பாடசாலையின் நலன்விரும்பி திருமதி க.மகேஸ்வரியும் கலந்து கொண்டனர்.

இதன்போது அணிவகுப்பு 60மீற்றர், 80மீற்றர்,100மீற்றர், 200மீற்றர் ஓட்ட நிகழ்வுகள், அஞ்சல் ஓட்டம், கலப்பு அஞ்சல், கயிறு இழுத்தல், கிழங்கு பொறுக்கல் உள்ளிட்ட விளையாட்டு நிகழ்வுகளுடன் இடைவேளை நிகழ்வும் இடம்பெற்றன.



# இராணுவத்திடம் தஞ்சம் அடைந்த மக்கள்; சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் சம்பவம்!

(பாறுக் ஷிஹான்)

சட்டவிரோத மதுபானம் காரணமாக பல சமூக மற்றும் குடும்ப பிரச்சினைகள் எழுந்துள்ளன என்று கூறி பொதுமக்கள் இலங்கை இராணுவத்திடம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை கணபதிபுரம் கிராமத்தை சேர்ந்த மக்கள் சிலரே நேற்று (19) அன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு இவ்வாறு இராணுவத்தின் உதவியை நாடியுள்ளனர்.

இதன்போது சட்டவிரோத மதுபானத்தால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் குடும்ப மோதல்கள் காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சம்மாந்துறை பொலிஸார் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறி போராட்டக்காரர்கள் இவ்வாறு மல்வத்தை பகுதியிலுள்ள இலங்கை இராணுவத்தின் 24 ஆவது காலாட்படை பிரிவு தலைமையகத்துக்குச் சென்று இராணுவ அதிகாரிகளிடம் தங்கள் குறைகளை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து உரிய தரப்பினரிடம் தெரிவிக்க நடவடிக்கை எடுப்பதாக இராணுவ அதிகாரிகள் அந்த மக்களிடம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# தனங்களப்பில் வைத்துத் தாக்கப்பட்ட ஓய்வுபெற்ற அதிபர் இன்று உயிரிழப்பு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவிப்பு

கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் தற்போதைய அதிபரும், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபரொருவரும் கடந்த சனிக்கிழமை (15) பூநகரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரவு வேளை பயணித்துக்கொண்டிருந்த போது தனங்கிளப்புக்கு அண்மித்த பகுதியில் நிறைபோதையில் வந்த காடையர் குழுவால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டனர். இந்த நிலையில், ஓய்வு பெற்ற அதிபர் விசுவாசம் இன்று (20) உயிரிழந்துள்ளார். இந்தச் செய்தி கல்விப் புலத்துக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர் ஆ.தீபன் திலீசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொது மக்களின் வாகனங்கள் சில ஏற்கனவே காடையர்களால் இந்த பகுதிகளில் கொள்ளையடிக்கப்பட்டு வந்துள்ளதைத் தற்போது அறிய முடிகின்றது.

இந்த நிலைமை இன்று ஒரு கல்வியலாளரின் உயிர் பறிக்கப்படுமளவுக்குச் சென்றுள்ளது. இது இலங்கையில், குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் சாதாரண மக்கள் கூட பாதுகாப்பாக பயணிக்க முடியாது என்ற நிலையையே வெளிப்படுத்தி நிற்கிறது.

தமது கடைமைகளின் நிமித்தம் கூட சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் சென்று வர முடியாத அளவுக்கு காடையர் கும்பலின் ஆதிக்கம் தலைதூக்கியிருக்கும் நிலையில், இத்தகைய சம்பவங்களை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியது. இதனை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

வடமாகாணத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகின்றதா? அல்லது காட்டாட்சி நடைபெறுகின்றதா? என்ற கேள்வியும் எழுகின்றது.

சில நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவிலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கி ஆசிரியர்கள் பயணித்த வாகனம் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இதன் போது அவ்வாகனத்தில் பயணித்திருந்த ஆசிரியர்கள் தெய்வாதீனமாக தப்பித்திருந்தனர்.

குறித்த ஆசிரியர்களின் வாகனப் போக்குவரத்து தொடர்பாக, ஆக்கபூர்மான செயற்பாடுகள் எதனையும் செய்யாமல், வரட்டு வியாக்கியானங்கள் கூறிவரும் வடமாகாண ஆளுநர் செயலகம், ஆசிரியர்கள் பயணித்த வாகனத்தின் மீது சட்டவிரோதமாக தாக்குல் நடத்தியோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதன் பின்னணியில் வடமாகாண ஆளுநரின் பக்கச்சார்பான செயற்பாடுகள் உள்ளதா? என்ற பாரிய சந்தேகங்கள் எழுகின்றன.

இப்படியான நிலையில், பூநகரி பிரதேச பாடசாலையின் அதிபர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாக்குதலுக்கும், படுகொலைக்கும் நீதியைப் பெற்றுக்கொடுப்பார்களா? என்பது சந்தேகமே.

தெற்கிலே நடைபெறும் சட்டவிரோத மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த உடனடியாக செயற்படும் அரசு, தமிழர் பகுதிகளில் நடைபெறும் சட்ட விரோத மற்றும் குற்றச்செயல்களுக்கு துணைபோய், பாரபட்சங்களை வெளிப்படுத்திவருவது புதிய விடயமல்ல.

தமது கடமைகளை சரியாக ஆற்ற முடியாத அதிகாரிகள் பதவியை விட்டு விலகுமாறு அறிவுரை கூறிவரும் வடமாகாண ஆளுநர், வடமாகாணத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுவதற்கும், ஆகக்குறைந்தது, கல்விச் சமூகம் தனது கடமைகளை உரிய நேரத்தில் ஆற்றுவதற்காக பாதுகாப்பாக பிரயாணத்தை மேற்கொள்வதற்காகவேனும் தனது பதவியை ஆரோக்கியமாக பயன்படுத்துகின்றாரா? என்பதை சுயபரிசோதனை செய்யவேண்டும்.

கல்விச் சமூகம் எதிர்நோக்கிவரும் பாரிய அச்சுறுத்தல்களை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிப்பதுடன், கல்விச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளுக்கு எதிராக விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் தொழிற்சங்க செயற்பாடுகளை மேற்கொள்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.- என்றுள்ளது.

# அன்பின் முத்தங்கள் நூல் அறிமுக விழா!


(அபு அலா, எஸ்.எம்.முபீன்)

அன்பின் பாதை எண்ணம் போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மைக்கல் கொலினின் "அன்பின் முத்தங்கள்" கவிதை நூல் அறிமுக விழா வெள்ளிக்கிழமை (22) திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் கனக தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவுக்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் க.மகேசன் முதன்மை விருந்தினராகவும், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன் சிறப்பு விருந்தினராகவும், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் நா.மணிவண்ண் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அழைப்பு விருந்தினராக ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீன கர்த்தாவுமான வேதாகம மாமணி சிவஸ்ரீ சோ.இரவிச்சந்திரகுருக்கள், எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமலை நவம், திருக்கோணேஸ்வரர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் சட்டத்தரணி திலகரத்தினம் துஷியந்தன், திருகோணமலை இலங்கை வங்கி முகாமையாளர் து.ரகுராம், மக்கள் வங்கி முகாமையாளர் அமீரடீன் கே. முகம்மட், பொறியியலாளர் வே.சதீஸ்குமார், அன்பின் பாதை இயக்குனர் கவிஞர் லலிதகோபன், திருமதி ரொசில்டா அண்டன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு நூலின் பிரதிகளைப் பெறவுள்ளனர்.

நூல் நயவுரையை கவிஞர் சு. சிவசங்கரனும், நிகழ்ச்சித் தொகுப்பை செல்வி அபிநயா ரகுராமும் நிகழ்த்தவுள்ளனர்.





# வர்த்தக நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவழிக்கை

(பாறுக் ஷிஹான்)

சரக்குக் கடைகள் மற்றும் சிறிய சுப்பர் மார்க்கெட்டுகளில் காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் ஆலோசனைக்கமைய சுகாதார வைத்திய அதிகாரிகளால் நேற்று புதன் கிழமை (19) சம்மாந்துறை புற நகர் பகுதியில் பல சரக்குக் கடைகள் மற்றும் சிறிய சுப்பர் மார்க்கெட்களில் காலாவதி யான உணவுப் பொருள்களை விற் பனை செய்த வர்த்தகர்களுக்கு எதிராக தொடரப்பட்ட 3 வழக்குகளில் இந் தத் தண்டப்பணம் அறவீடு செய்யப் பட்டது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன் றத்தில் குறித்த வர்த்தகர்களுக்கு மொத் தமாக 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன்போது நிறக் குறியீடு இடப்படாத உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு இறுதி எச்சரிக்கை வழங்கப்பட்டது. எதிர்வரும் நோன்பு காலத்தை முன்னிட்டு மக்க ளுக்கு சிறந்த உணவுப் பொருள்களை வழங்கும் பொருட்டு தொடர் பரிசோத னைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

# டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக

## நினைவு நூல் வெளியீடு!

டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் இ.சு.முர ளிதரன் எழுதிய ‘கதைப்பந்தாட்டம்’ எனும் நூல் தற்போது தாயகத்தில் வெளி வரவுள்ளது.

சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவ பணியாற்றிய வைத்தியர் ப. விக்கினேஸ்வரா அமரராகி மூன்று வருடமாகிறது. அவரிடம் சிகிச்சை பெற்ற மக்கள் இன்றும் அவரது திறமை களையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.

ஜீவநதி பதிப்பகத்தின் 436 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண் பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக, இ.சு.முரளிதரன் எழுதிய கதைப்பந்தாட்டம், சுவைஞனின் மதிப்பீட்டுப் படிவம் எனும் நூல் வெளி வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் டாக்டர் ப.விக்கி னேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தா ளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றமை அறிந்ததே. 2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 3 ஆம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய “ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்” எனும் நூல் வெளியானது.

இதன்பின் 2023 இல் டாக்டர் ப. விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய “பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல” எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.



கடந்த வருடம் 2024 இல் டாக்டர் விக்கினேஸ்வராவின் ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணியால் எழுதப்பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான “கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்” எனும் நூல் வெளிவந்தமை குறிப்பிடத் தக்கது.

தற்போது டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக “கதைப் பந்தாட்டம்” எனும் நூல் தற்போது வெளி வரவுள்ளது.



# அரசின் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு 300 கிலோ நெல்லை வழங்க வேண்டும்

## விவசாயிகளுக்கு திருமலை மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமானது மாவட்ட அரச அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன பங்கேற்புடன் நேற்று (19) திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



இதன்போது , ஒவ்வொரு விவசாயியும் அரசின் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு குறைந்தது 300 கிலோ நெல்லை வழங்க வேண்டும் என மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டிக் கொண்டார்.

2024 ஆம் ஆண்டு விவசாயக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும், முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட ஒருங்கிணைந்த விவசாய அமைப்புகள், விவசாயிகளின் கள நிலை பிரச்சினைகள் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்கள் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் பெறப்பட்டன.

மேலும் திருகோணமலை மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பிரதேச செயலக விவசாயக் குழுக்கூட்டத்தில் இருந்து மாவட்ட செயலகத்துக்கு முன்மொழியப்பட்ட பிரச்சினைகளும் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் கே.சுப்ரமணியம், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் கலாநிதி தி.கருணைநாதன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து; ஒருவர் உயிரிழப்பு

சிவகாசி அருகே போடுரெட்டியபட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிவகாசி பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் கிச்சன்நாயக்கன்பட்டி அருகே போடுரெட்டியபட்டியில் பட்டாசு ஆலை நடத்தி வருகிறார். இந்த ஆலையில் உள்ள 40 இற்கும் அதிகமான அறைகளில் 80 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று மாலை 5.30 மணி அளவில் அங்கு பட்டாசு உற்பத்தியின்போது உண்டான உராய்வு காரணமாக திடீர் வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ஓர் அறை முற்றிலும் இடிந்து தரைமட்டமானது. விபத்துக் குறித்து தகவலறிந்து விரைந்து வந்த சிவகாசி தீயணைப்புத் துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.



இந்த விபத்தில் பட்டாசு ஆலையில் பணிபுரிந்த ஆண் தொழிலாளி ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தார். திருத்தங்கலை சேர்ந்த பால்பாண்டி (வயது 30) என்ற தொழிலாளி 20 சதவீத தீக்காயங்களுடன் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்து குறித்து மாரனேரி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# அமுதக் கரங்கள் திட்டம் இன்று முதல் ஆரம்பம்

தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் எதிர்வரும் முதலாம் திகதி தனது 72 ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். அவரது பிறந்தநாளை கொண்டாட தி.மு.க. தொண்டர்கள், நிர்வாகிகள் என அனைவரும் தயாராகி வருகின்றனர்.

இந்த நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை கொளத்தூரில் 'அமுதக் கரங்கள்' திட்டத்தை துர்கா ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று முதல் அடுத்த ஆண்டு பிப்ரவரி 19 ஆம் திகதி வரை 365 நாள்களும், நாள் ஒன்றுக்கு 1000 பேருக்கு வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்கும் 'அமுதக் கரங்கள்' திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.



# இந்தியாவுக்கான 21 மில்லியன் டொலர் மானியத்தை நிறுத்தியது அமெரிக்கா

இந்தியாவில் வாக்காளர் எண்ணிக்கையை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட 21 மில்லியன் டொலர் மானியத்தை இரத்து செய்வதற்கான எலோன் மஸ்க் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத் திறன் துறை எடுத்த முடிவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த செவ்வாயன்று ஆதரித்தார்.

இந்த முயற்சிக்கு அமெரிக்க வரி செலுத்துவோரின் பணத்தைப் பயன்படுத்துவதை ட்ரம்ப் கேள்வி எழுப்பினார்.

இது இந்தியாவின் தேர்தல் செயல்பாட்டில் வெளிநாட்டு தலையீடு குறித்த விவாதத்தைத் தூண்டியது.

இது குறித்து புளோரிடாவில் அமைந்துள்ள மார்-ஏ-லாகோ இல்லத்தில் நிர்வாக உத்தரவில் கையெழுத்திடும் போது ட்ரம்ப்,

"நாம் ஏன் இந்தியாவுக்கு 21 மில்லியன் டொலர் கொடுக்கிறோம்? அவர்கள் நிறைய பணம் பெற்றுள்ளனர். நம்மைப் பொறுத்தவரை உலகிலேயே அதிக வரி விதிக்கும் நாடுகளில் அவை ஒன்று; அவற்றின் கட்டணங்கள் மிக அதிகமாக இருப்பதால் நாங்கள் அங்கு நுழைய முடியாது.

இந்தியா மற்றும் அவர்களின் பிரதமர் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு, ஆனால் வாக்காளர்களுக்கு 21 மில்லியன் டொலர் கொடுக்கிறேன்? இந்தியாவில்? இங்கே வாக்காளர்களின் எண்ணிக்கை என்ன?" என்றார்.

பில்லியனர் தலைமையிலான அமெரிக்க அரசின் செயல்திறன் துறை (DOGE) கடந்த சனிக்கிழமை "இந்தியாவில் வாக்காளர் எண்ணிக்கையை" அதிகரிக்கும்



நோக்கிலான USAID இன் 21 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கீட்டை இரத்து செய்யும் முடிவை அறிவித்தது.

DOGE ஆனது அமெரிக்க அரசாங்கம் முழுவதும் பணியாளர்களைக் குறைப்பதை மேற்பார்வையிடும் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, உலகெங்கிலும் உள்ள மனிதாபிமான முயற்சிகளுக்குப் பொறுப்பான சர்வதேச வளர்ச்சிக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் முகவர் நிலையத்தை (USAID) மூடுவதாக மஸ்க் அறிவித்தார்.

பெப்ரவரி 7 அன்று USAID அதிகாரிகளின் கூற்றுப்படி, உலகளவில் அனைத்து USAID மனிதாபிமான வேலைகளும் நிறுத்தப்பட்டதாக ABC நியூஸ் தெரிவித்தது.

மஸ்க்கின் அறிவிப்புக்கு முன்பே அன்று USAID இன் இணையதளம் மூடப்பட்டது.

பின்னர், ட்ரம்பினால் நியமனம் செய்யப்பட்ட நீதிபதி ஒரு தற்காலிக தடை உத்தரவை முறைப்படி அறிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.





# சூடான் உள்நாட்டு போர்; 200 பேர் உயிரிழப்பு

சூடான் நாட்டில் உள்நாட்டு போர் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இங்கு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய நிலையில், அவர்களுக்கு எதிராக துணை இராணுவம் தீவிரமாக போரிட்டு வருகிறது.

இந்த மோதலில் பொதுமக்கள், இராணுவ வீரர்கள் உள்பட 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையே, சூடானின் தெற்கு பகுதியின் அல்-கடாரிஸ், அல்-கேல்லவட் கிராமத்தில் துணை இராணுவப் படையினர் பதுங்கி இருந்து செயல்படுவதாக அந்நாட்டின் இராணுவத்தினருக்கு தகவல் கிடைத்தது.

இதனால் ராணுவத்தினர் அங்கு களம் இறக்கப்பட்டனர். தொடர்ந்து ராக்கெட் குண்டுகளை வீசியும், துப்பாக்கிச் சூடு நடத்தியும் பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த 3 நாளாக நீடித்து வரும் இந்தத் தாக்குதலில் தற்போதுவரை 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சர்வாதிகாரி என விமர்சித்தார் ட்ரம்ப்

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கி 'ஒரு சர்வாதிகாரி' என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

இது இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலான பிளவை ஆழப்படுத்தியுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக சவுதி அரேபியாவில் இடம்பெற்ற அமெரிக்க - ரஷ்ய பேச்சுவார்த்தைகளில் தமது தரப்பு புறக்கணிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பை



வெளியிட்ட உக்ரைன் ஜனாதிபதி, 'ரஷ்யாவின் தவறான தகவல்களுடன் அமெரிக்க ஜனாதிபதி உள்ளார்' என விமர்சித்திருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி விரைவில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனவும் இல்லையெனில் அவருக்காக ஒரு நாடும் இருக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, உக்ரைன் ஜனாதிபதியை 'சர்வாதிகாரி' என விமர்சித்துள்ள அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக ஜேர்மனி சான்ஸ்லர் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.





# சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ளமைக்கு அரசியலே காரணம்: ஈலோன் மஸ்க்

அரசியல் காரணங்களாலேயே சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் சர்வதேச விண்வெளி மையத்தில் தற்போது வரை சிக்கியுள்ளனர் என ஈலோன் மஸ்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் அறிவுறுத்தலுக்கு ஏற்ப அவர்களை அழைத்து வரும் பணியை ஸ்பேஸ் எக்ஸ் துரிதமாக மேற்கொண்டது.

இருந்தாலும் அது பல்வேறு காரணங்களால் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டதாக ஈலோன் மஸ்க் தெரிவித்துள்ளார். சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில் மோரை விரைவாக அழைத்து வருவதற்கான பணிகளைத் துரிதப்படுத்தி உள்ளதாகவும் இருவரையும் விண் வெளியிலிருந்து வெற்றிகரமாக அழைத்து வருவோம் எனவும் ஈலோன் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு

வியாழக்கிழமை 20/02/2025

## டொரன்டோவில் வரி அதிகரிப்பு

கனடாவின் டொரன்டோ நகரில் வரி அதிகரிக்கப்பட உள்ள தாக அறிவிக்கப்பட்டது.

டொரன்டோ நகர முதல்வர் ஒலிவியா செள தாக்கல் செய்த வரவு - செலவு திட்டம் 02



# 8 ஆண்டுகளின் பின்னர் கனடாவில் உணவுப் பொருள்கள் விலை வீழ்ச்சி

கனடாவில் எட்டு ஆண்டுகளின் பின்னர் உணவுப் பொருள்களின் விலைகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் முதல் தடவையாக உணவுப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.


கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஜனவரி மாத்தத்தில் ஒட்டு மொத்த பணவீக்க வீதம் அதிகரித்துள்ளது.

எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

எனினும் உணவுப் பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக உணவகங்களில் விலைகள் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ள தாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# கனடாவில் இரண்டு வீடுகளுக்கு தீ மூட்டிய நபர்களை தேடும் பொலிஸ்

கனடாவின் யோர்க் பிராந்தியத்தில் இரண்டு வீடுகளுக்கு தீ மூட்டிய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இந்த தீமூட்டல் சம்பவம் குறித்த காணொளி பதிவுகள் வெளியாகி உள்ளன.

யோக் பிராந்திய பொலிஸார் மேற்படி இரண்டு சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

யோர்க் பிராந்தியத்தின் டாக்டு ராங்கோ வீதி பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இரண்டே நபர்களும் வாகனம் ஒன்றில் இருந்து எரிபொருள்களை எடுத்து வீடுகள் மீது ஊற்றி தீமூட்டி சென்றுள்ளனர். இந்த சம்பவம் குறித்த காணொளிகள் பதிவாகப் பதிவாகியுள்ளன.

இந்த சம்பவத்தில் எவரும் காயம் அடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கறுப்பு ஆடை அணிந்து முக கவசங்களை அணிந்த இருவரே இந்த தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# தேர்தலில் போட்டியிடப் போவதில்லை; கனடிய மரபுரிமைகள் அமைச்சர் அறிவிப்பு



கனடாவின் மரபுரிமைகள் அமைச்சர் பெஸ்கல் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இது தொடர்பில் அவருக்கு நெருக்கமானவர்கள் தகவல் வெளியிட்டுள்ளார் என செய்திகள் வெளியாகி உள்ளன.

கனடிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கூடுதல் நேரத்தை குடும்பத்துடன் கழிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெஸ்கால் லிபரல் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி 7 வயதான சிறுவன் காயம்

கனடாவில் 7வயதான சிறுவன் ஒருவன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

கனடாவின் லண்டன் பகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பதிவாகியுள்ளது. லண்டனின் பினான்சார்ட் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு உள்ளேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.தவறுதலாக துப்பாக்கி வெடித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர் பில் 44 வயதான நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் சட்டவிரோதமான முறையில் ஆயுதம் வைத்திருந்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் உயிர் ஆபத்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.







## டொரன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படியே வரி வீதமானது 6.9 வீதத்தினால் அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. முதல்வரினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் எவ்வித நிறைவேற்றப்பட்டுள்ளது.

சொத்து வரி இவ்வாறு 6.9 வீதமாக உயர்த்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நகர முதல்வராக பங்கேற்றதன் பின்னர் சொள சமர்ப்பித்த இரண்டாவது வரவு செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.



# வளர்ப்பு நாய் கடித்ததில் சிசு ஒன்று உயிரிழப்பு

மேற்கு - மத்திய ஆல்பர்ட்டாவில் வளர்ப்பு நாய் கடித்ததில் பிறந்து 14 நாள்களே ஆன ஆண் குழந்தை யொன்று உயிரிழந்துள்ளது என கனே டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எவன்ஸ்பர்க்கில் இருந்து ஆம்பு லன்ஸ் குழுவினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டபோது, ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணியளவில் என்ட்விசில் பகுதியில் இந்த சம்பவம் நடந்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

உயிருக்கு ஆபத்தான கடி காயங்க ளுக்கு உள்ளான குழந்தை, ஸ்டார் ஏர் அம்பியூலன்ஸ் மூலமாக எட்மண் டனில் அமைந்துள்ள ஸ்டோலரி சிறுவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

குழந்தையை காப்பாற்றுவதற்கான மருத்துவ நிபுணர்களின் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது பலனிக்காமல் குழந்தை இறந்துவிட் டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த தகவலை கனேடிய பொலி ஸார் கடந்த திங்கள் கிழமை பிற்பகு தியில் வெளியிட்டனர்.

இந்த சம்பவம் குறித்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.



# கனடாவில் வீடுகளின் விற்பனையில் வீழ்ச்சி

கனடாவில் வீடுகளின் விற்பனை யில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்த தகவல்களை கனடிய வீட்டு மனை ஒன்றியம் வெளியிட் டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் வீடுகளின் விற்பனையானது கடந்த டிசம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது மூன்று வீதத்தினால் குறைவடைந் துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய் யும் போது இந்த ஆண்டில் வீடுகளின் விற்பனை ஜனவரி மாதத்தில் 2.9 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

வரி விதிப்பு வட்டி வீதம் போன்ற காரணிகளின் அடிப்படையில் வீடு களின் விற்பனை குறைவடைந்துள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கடந்த டிசம்பர் மாதம் வீடுகள் விற்பனை தொடர்பான பட்டியலுக்கு சேர்க்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 11 வீதத்தினால் அதி கரித்து காணப்பட்டதாக தெரிவிக்கப்ப டுகின்றது.